**கருவூலக்கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**தமிழ்நாடு,சென்னை–35.**
*****************

**முன்னிலை: திரு.க.விஜயேந்திரபாண்டியன், இ.ஆ.ப**

செ.மு.ந.க. எண்4634/சி1/20223 நாள். 09. 11.2023

**பொருள்:** பணியமைப்பு–கருவூலக்கணக்குத்துறை– திருS.கார்த்திகேயன்,இளநிலை உதவியாளர், திருப்பூர் மாவட்ட கருவூல அலகு–கருணை அடிப்படையில்பணிநியமனம்– பணிவரன்முறை ஆணைகள்

**பார்வை:**
1. கருவூல அலுவலர், திருப்பூர் அவர்களின் கடித ந.க. எண். 7069/2021/அ1, நாள்01.06.2022
2. கருவூல அலுவலர், திருப்பூர் அவர்களின் கடித ந.க. எண். 7069/2021/அ1, நாள் 09.02.2023
3. கருவூலக்கணக்கு ஆணையரக கடித ந.க. எண் 4634/ சி1/2023 நாள் 23.01.2023
4. அரசாணை(3ப)எண்.60,நிதி (க.க.–2) த்துறை நாள்.18.10.2023

***************

**ஆணை:**

திருப்பூர் மாவட்டக் கருவூல அலகில் கண்காணிப்பாளராக பணியாற்றிய திருமதி.S.காந்திமதி அவர்கள் 26.03.2021 அன்று பணியிலிருக்கும்போது மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரும் மகனுமாகிய திருS.கார்த்திகேயன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை–1ல் காணும் செயல்முறை ஆணைப்படி 03.06.2022 முற்பகல் முதல் திருப்பூர் மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை–4–இல் காணும் அரசாணையில், பார்வை–1–இல் காணும் செயல்முறை ஆணைப்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருS.கார்த்திகேயன் (S.காந்திமதி ,கண்காணிப்பாளர், மாவட்டக்கருவூலம்,திருச்சி

என்பவரின் மகன்) கருணை அடிப்படையில், தற்காலிகமாக இளநிலை உதவியாளராக 03.06.2022 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருபவரின் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், அப்பதவிக்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருS.கார்த்திகேயன் இளநிலை உதவியாளரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 03.06.2022 முற்பகல் முதல்,அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை வரன்முறைப்படுத்தி செய்யப்படுவதன் மூலம் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத்தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றை பெற தகுதியுடையவராகிறார்.

இவ்வாறு, தனியரின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து,தமிழ்நாடுகருவூலக்கணக்குத்துறை விதிகளின்படி, பணிவரன்முறை நாளான 03.06.2022 முதல் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார். தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதேனும் இருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்.

பெறுநர்

1. திரு.S.கார்த்திகேயன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக்கருவூலம்,திருப்பூர்
திருப்பூர் மாவட்டக்கருவூல அலகு.
(உரிய வழிமுறையாக)
2. கருவூல அலுவலர்,
மாவட்டக்கருவூலம்
திருப்பூர்.

3.இருப்புக்கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர் 1/11/2023

ந.க.எண் 7069/2021/அ நாள் -11-23
நகல் சார்வு செய்யப்படுகிறது.
பெறுநர்
திரு. S. கார்த்திகேயன்,
இ.நி.உ., மா.க., தி

9/11/2023